**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**

**முன்னிலை: செல்வி. சு. அபூர்வா, பி.ஏ., எல்.எல்.பி.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.**

**2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 ஆம் நாள் திங்கட்கிழமை**

**இ.ம.எண்.1/2025**

**இன்**

**அ.வ.எண்.24/2025**

S.கணேஷ் காந்தி ....வாதி/மனுதாரர்

//எதிர்//

ராஜசேகர் ....எதிர்மனுதாரர் /பிரதிவாதி

இந்த மனுவானது கடந்த 09.10.2025 ஆம் தேதி இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.S.அன்வர்தீன்** அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதார்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.S.ஜெயராமன்,** அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், நாளது தேதி வரை இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

அசல் வழக்கு முடியும் வரை மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனுச் சொத்துக்களை அமைதியான முறையில் சுவாதீனம் இருந்து அனுபவித்து வருவதை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ, அவர்களது வகை ஆட்களோ, அவரது ஏஜென்டுகளோ, தாங்கள் கட்டியிருக்கும் வீட்டிற்கு எவ்வித கூரையடியும் விடாமல் கூரையடி பாத்தியத்தில் மேல்மாடிக்கு செல்ல படிக்கட்டுகள் அமைத்து மனுதாரருக்கு இடைஞ்சல் செய்யக்கூடாது என்று எதிர்மனுதாரருக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை **39 விதி 1, 2, 3** மற்றும் பிரிவு **151–**ன் கீழ் மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம் :</u>**

2.1. மனுச்சொத்து கோதைமங்களம் கிராமம், சர்வே எண்.415/1B1 A1 க்கு கட்டுப்பட்ட சொத்து என்றும், மேற்படி சொத்துக்களை மனையிட பிரிவுகளாக பிரித்ததில் மனை பிரிவு எண்.44 ல் 3 சென்ட் இடத்தில் சதுரடி 1309–3/4 உள்ள இடத்தை சென்ற 23.01.2012 ம் தேதி பழனி வட்டம், கோதைமங்களம் கிராமம், R.M.K.நகர், 35 வது தெருவில் குடியிருக்கும் திரு.K.K.ராமன் மனைவி திருமதி.K.விமலா என்பவர் தகுந்த பிரதிபிரயோஜனத்தின் பேரில் கிரையம் பெற்று இருந்து வந்தார்

என்றும், மேற்படி இடத்தை மனுதாரர் சென்ற 23.01.2025 ஆம் தேதி மேற்படி கே.விமலா என்பவரிடமிருந்து தகுந்த பிரதி பிரயோஜனத்தின் பேரில் கிரையம் பெற்று அந்த இடத்தை பட்டா பெற்று அனுபவித்து இருந்து வருகிறார் என்றும், மேற்படி இடத்தில் கோதைமங்களம் ஊராட்சியில் சென்ற 24.03.2016 ஆம் தேதி மேற்படி மனையிடத்திற்கு வீடு கட்ட கோதைமங்களம் ஊராட்சி மன்றத்தில் அனுமதி பெற்று அந்த அனுமதியின் பெயரில் வீட்டுமனையில் வரைபடம் அமைத்து அதில் வீடு கட்டி குடியிருந்து அனுபவித்தும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறார் என்றும் மேற்படி வீட்டிற்கு மனுதாரர் பெயரில் வீட்டு வரி செலுத்தியும் மின் இணைப்பு பெற்றும் மின் கட்டணம் செலுத்தியும், அனுபவித்தும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறார் என்றும், மேற்படி வீடு தெற்கு பார்த்து அமைந்துள்ளது என்றும், அதில் மேல்புறம் எல்லையில் 1-1/2 அடி கூரையடி பாத்தியம் விட்டு வீடு கட்டி குடியிருந்து அனுபவித்தும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறார் என்றும் கூறப்பட்டுள்ளது.

2.2. மேற்படி மனுதாரர் வீட்டிற்கு மேல் புறம் வீட்டுமனை எண் 45 ஐ எதிர்மனுதாரர் கிரையம் பெற்று அந்த மனை பிரிவும் சுமார் 3 சென்ட் 1309-3/4 சதுர அடி உள்ள இடத்தில் வீடு கட்டி வருகிறார் என்று, இந்நிலையில் மனுதாரர் நல்ல முறையில் வேலை பார்த்து இருந்து வருவதை பொறுக்காது எதிர்மனுதாரர் தனது வீட்டின் கட்டிட பகுதியில் கிழபுறம் தனது வீட்டை ஒட்டி எவ்வித கூரையடி பாக்கியமும் விடாமல்

கட்டிடம் கட்டி அதில் தற்பொழுது வேண்டுமென்றே படிக்கட்டு அமைத்து மேல் மாடிக்கு செல்ல இருக்கிறார் என்றும், எதிர்மனுதாரர் தனது கட்டிடம் கட்டிய பின்பு மேல் மாடிக்கு செல்ல கூரையடி பாத்தியம் எதுவும் விடாமல் அந்த இடத்தில் மேல் மாடிக்கு செல்ல படிக்கட்டு அமைத்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரரரின் சட்ட விரோத செயல் குறித்து பழனி டவுன் காவல்துறையில் சென்ற 15.02.2025 ஆம் தேதி புகார் மனுவும் கொடுத்து CSR ரசீதும் பெற்றுள்ளார் என்றும், எதிர்மனுதாரர் கூரையடி பாத்தியம் விடாமல் கட்டிடம் கட்டியுள்ளதால் தனது வீட்டிற்கு வெளிகாற்றும், வெளிச்சமும் கிடைக்காமல் மிகுந்த தொந்தரவு ஏற்படுத்தியும் மிகுந்த இடைஞ்சல் செய்து வருகிறார் என்றும், அத்துடன் மேற்படி கூரையடி இடத்தில் படிக்கட்டு அமைத்தால் தனது வீட்டின் பார்வை எதிர்மனுதாரருக்கு விழுந்து எனது பெண் மக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்பட்டு விடும் என்றும், எதிர்மனுதாரர் கூரையடி பாத்தியம் விடாமல் தான் கட்டிடம் கட்டுவதற்கு எந்தவித உரிமையும் கிடையாது என்றும், மேற்படி எதிர்மனுதாரர் கோதைமங்களம் ஊராட்சியில் கூரையடி பாத்தியத்தை சேர்த்து கட்டிடம் கட்டுவதற்கு எவ்வித அனுமதியும் பெறவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

2.3. எனவே, எதிர்மனுதாரர் தனது கட்டிடத்தின் கூரையடி பாத்தியம் விடாமல் மனுதாரரது கட்டிடத்தை ஒட்டி கட்டிடம் கட்டி படிக்கட்டு அமைப்பதால் தனது கட்டிடத்தை பூசி பராமரிப்பதற்கு இன்னல்கள் ஏற்பட்டு விடும் என்றும், மனுதாரருக்கு பாத்தியப்பட்ட

மனுச் சொத்துக்களை அமைதியான முறையில் சுவாதீனம் இருந்து அனுபவித்து வருவதை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ, அவர்களது வகை ஆட்களோ, அவரது ஏஜெண்டுகளோ, தாங்கள் கட்டியிருக்கும் வீட்டிற்கு எவ்வித கூரையடியும் விடாமல் கூரையடி பாத்தியத்தில் மேல்மாடிக்கு செல்ல படிக்கட்டுகள் அமைத்து மனுதாரருக்கு இடைஞ்சல் செய்யக்கூடாது என்று எதிர்மனுதாரருக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிட வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் :</u>**

3.1. புல எண் 415/1பி1ல் மனையிடங்களாக பிரிக்கப்பட்டதில் எதிர்மனுதாரர் மனை எண். 45 ஐ கிரையம் பெற்றார் என்றும், அதேபோல் வாதி அவரிடத்தில் 1–1/2 கூரையடிப் பாத்தியம் விட்டுக் கட்டியிருப்பதாக கூறி இருப்பது பொய்யானதாகும் என்றும், அவர் 1 அடி மட்டுமே விட்டுள்ளார் என்றும், மனுதாரர்/வாதியின் வீட்டிற்கு மேல்புறம் தான் இந்த எதிர்மனுதாரர் வீடு அமைந்துள்ளது என்றும், எதிர்மனுதாரர் அவரது இடத்தில் கிழக்குப் பக்கம் 1–1/2 அடி கூரையடி பாத்தியம் விட்டு தான் வீடு கட்டியுள்ளார் என்றும், ஆனால் இந்த எதிர்மனுதாரர் எந்த எவ்வித கூரையடி பாத்தியமும் விடாமல் கட்டிடம் கட்டுவதற்கு கூறியிருப்பது முற்றிலும் தவறானதாகும் என்று, மனுதாரர்/வாதி தான் அவரது வீட்டிற்கு முன்புறம் அவர் வாங்கிய அளவான கிழமேலாக 31 அடியை விட 1/2 அடி சேர்த்து கட்டியுள்ளார் என்றும், அதனை

மறைப்பதற்காகவே ஏதோ எதிர்மனுதாரர் கூரையடி பாத்தியம் ஏதும் விடாமல் மாடிக்குச் செல்ல படிக்கட்டு அமைத்து வருவதாக கூறியிருப்பது முற்றிலும் தவறானது என்றும், எதிர்மனுதாரர் அவரது இடத்திற்குள் அவரது மேல் மாடிக்கு செல்வதற்கு படிக்கட்டு அமைத்துள்ளார் என்றும், என்றும் கூறப்பட்டுள்ளது.

3.2. அதனை தொடர்ந்து, எதிர்மனுதாரர் யும் கோதைமங்கலம் ஊராட்சியிலும் மற்றும் DTCP–யிலும் வீடு கட்டுவதற்கு அனுமதி பெற்று தான் வீடு கட்டி உள்ளார் என்றும், தற்போது எதிர்மனுதாரர் அவரது வீட்டில் வேலையினை முடித்து மேற்படி வீட்டிற்கு குடியும் சென்று அங்கு வசித்து வருகிறார் என்றும், மனுதாரர்/வாதி எதிர்மனுதாரர் வீடு கட்டுவதை தடை செய்தால் மேற்படி இடத்தினை மனுதாரர்/வாதிக்கே விட்டு விட்டு சென்று விடுவார் என்ற எண்ணத்தில் இந்த அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்த எதிர்மனுதாரர் அவரது கிரைய பத்திர அளவில் அவர் குடியிருப்பதற்கு தேவையான வெளிச்சம் காற்றோட்டத்திற்கு இடைவெளி விட்டு தான் வீடு கட்டியுள்ளார் என்றும், எதிர்மனுதாரர் தான் தற்பொழுது அவரது இடத்தில் சுற்று சுவர் அமைத்து எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யாத நிலையில் எதிர்மனுதாரர் மன உளைச்சலுக்கு ஆளாக்கி அவரது தொழில் நல்ல முறையில் செய்து வருவதை தடுக்க வேண்டும் என்பதற்காகவே தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.12 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், "மனுதாரர் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா என்பது ஆகும்."

**6. தீர்வு :**

6.1. மனுதாரர் தரப்பில், மனு சொத்திற்கு சென்ற 24.03.2016 ஆம் தேதி மேற்படி மனையிடத்திற்கு வீடு கட்ட கோதைமங்களம் ஊராட்சி மன்றத்தில் அனுமதி பெற்று அந்த அனுமதியின் பெயரில் வீட்டுமனையில் வரைபடம் அமைத்து அதில் வீடு கட்டி குடியிருந்து அனுபவித்தும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறார் என்றும் மேற்படி வீட்டிற்கு மனுதாரர் பெயரில் வீட்டு வரி செலுத்தியும் மின் இணைப்பு பெற்றும் மின் கட்டணம் செலுத்தியும், அனுபவித்தும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறார் என்றும், மேற்படி வீடு தெற்கு பார்த்து அமைந்துள்ளது என்றும், அதில் மேல்புறம் எல்லையில் 1–1/2 அடி கூரையடி பாத்தியம் விட்டு வீடு கட்டி குடியிருந்து அனுபவித்தும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரர் தனது வீட்டின் கட்டிட பகுதியில் கிழபுறம் எனது வீட்டை ஒட்டி எவ்வித

கூரையடி பாக்கியமும் விடாமல் கட்டிடம் கட்டி அதில் தற்பொழுது வேண்டுமென்றே படிக்கட்டு அமைத்து மேல் மாடிக்கு செல்ல இருக்கிறார் என்றும், எதிர்மனுதாரர் தனது கட்டிடம் கட்டிய பின்பு மேல் மாடிக்கு செல்ல கூரையடி பாத்தியம் எதுவும் விடாமல் அந்த இடத்தில் மேல் மாடிக்கு செல்ல படிக்கட்டு அமைத்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரர் கட்டியிருக்கும் வீட்டிற்கு எவ்வித கூரையடியும் விடாமல் கூரையடி பாத்தியத்தில் மேல்மாடிக்கு செல்ல படிக்கட்டுகள் அமைத்து மனுதாரருக்கு இடைஞ்சல் செய்யக்கூடாது என்று எதிர்மனுதாரருக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது. மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் **B.S. Ammani Ammal Vs T.S. Ranganayaki Ammal (AIR 1926 MAD 898)** என்ற வழக்கை மேற்கோள் காட்டி வாதிட்டார்.

6.2. எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர்/வாதியின் வீட்டிற்கு மேல்புறம் தான் இந்த எதிர்மனுதாரர் வீடு அமைந்துள்ளது என்றும், எதிர்மனுதாரர் அவரது இடத்தில் கிழக்குப் பக்கம் 1–1/2 அடி கூரையடி பாத்தியம் விட்டு தான் வீடு கட்டியுள்ளார் என்றும், எதிர்மனுதாரர் வீடு கட்டுவதற்கு அனுமதி பெற்று தான் வீடு கட்டி உள்ளார் என்றும், தற்போது எதிர்மனுதாரர் அவரது வீட்டில் வேலையினை முடித்து மேற்படி வீட்டிற்கு குடியும் சென்று அங்கு வசித்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரர் தான் தற்பொழுது அவரது இடத்தில் சுற்று சுவர் அமைத்து

எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யாத நிலையில் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

7. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அசல் வழக்கு முடியும் வரை மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனுச் சொத்துக்களை அமைதியான முறையில் சுவாதீனம் இருந்து அனுபவித்து வருவதை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ அவர்களது வகை ஆட்களோ, அவரது ஏஜென்டுகளோ, தாங்கள் கட்டியிருக்கும் வீட்டிற்கு எவ்வித கூரையடியும் விடாமல் கூரையடி பாத்தியத்தில் மேல்மாடிக்கு செல்ல படிக்கட்டுகள் அமைத்து மனுதாரருக்கு இடைஞ்சல் செய்யக்கூடாது என்று எதிர்மனுதாரருக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிட வேண்டும் என்று மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு, எதிருரை, ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்ததில் அசல் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனு சொத்துக்களை அமைதியான முறையில் சுவாதீனம் இருந்து அனுபவித்து வருவதை எதிர்மனுதாரரோ அவர்களது வகை ஆட்களோ, அவரது ஏஜென்டுகளோ, தாங்கள் கட்டியிருக்கும் வீட்டிற்கு எவ்வித கூரையடியும் விடாமல் கூரையடி பாத்தியத்தில் மேல் மாடிக்கு செல்ல படிக்கட்டுகள் அமைத்து மனுதாரருக்கு இடைஞ்சல் செய்யக்கூடாது என்று எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. இம்மனுவில் முதலில், தற்காலிக உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்க, முதல் தோற்ற வழக்கு **(Prima facie Case)** உள்ளதா? என்பதையும், வசதியின் சமநிலை **(Balance of convenience)** உள்ளதா? என்பதையும், தற்காலிக உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்காதபட்சத்தில் மனுதாரருக்கு ஈடு செய்ய இயலாத இழப்பு **(Irrepairable loss)** ஏற்பட வாய்ப்பு உள்ளதா? என்பதையும் முடிவு செய்ய வேண்டியதுள்ளது.

9. மனு, எதிருரை, ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்யப்பட்டது. மனு சொத்தானது மனுதாரருக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் உள்ளது என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதி ஆகும். மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்ததில் மனு சொத்தானது மனுதாரருக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதையும் மனுதாரரின் வீட்டிற்கு மேல்புறம் வசித்து வரும் எதிர்மனுதாரர் தனது நிலத்தில் கிழக்குப்புறம் மேல்மாடிக்கு செல்ல படிக்கட்டு அமைத்து வருகிறார் என்பதையும் அறிய முடிகிறது. மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் தனது கட்டிடத்தின் கூரையடி பாத்தியம் விடாமல் மனுதாரரது கட்டிடத்தை ஒட்டி கட்டிடம் கட்டி படிக்கட்டு அமைப்பதால் தனது கட்டிடத்தை பூசி பராமரிப்பதற்கு இன்னல்கள் ஏற்பட்டு விடும் என்று வாதிடப்பட்டது. ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில் தனது கட்டிடத்தில் கூரையடி பாத்தியம் விட்டு தான் வீடு கட்டியுள்ளார் என்றும், தனது இடத்திற்குள் தான் மேல்மாடிக்கு செல்வதற்கு

படிக்கட்டு அமைத்துள்ளார் என்றும், எதிர்வாதம் செய்யப்பட்ட நிலையில் தனது வீட்டின் கிழபுறம் மனுதாரர் வீட்டினை ஒட்டி கூரையடி பாத்தியம் விட்டுதான் காட்டியுள்ளார் என்று எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது தவிர மேற்படி கூற்றை நிரூபிக்கும் வகையில் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இந்நிலையில் மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் தனது இடத்தில் கூரையடி பாத்தியம் விடாமல் படிக்கட்டு கட்ட முயற்சி செய்து வருகிறார் என்றும், அதனால் மனுதாரர் தனது வீட்டை பூசுவதற்கு பாத்தியம் இல்லாமல் கூரை தண்ணீர் போக வழியில்லாமல் ஆகிவிடும் என்றும் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

10. எனவே, அசல் வழக்கு விசாரணை முடிந்து தீர்ப்பாணை பிறப்பிக்கும் வரை, மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனு சொத்தில் அமைதியான முறையில் சுவாதீனம் இருந்து அனுபவித்து வருவதை எதிர்மனுதாரர் கட்டியிருக்கும் வீட்டிற்கு எவ்வித கூரையடியும் விடாமல் கூரையடி பாத்தியத்தில் மேல் மாடிக்கு செல்ல படிக்கட்டுகள் அமைத்து மனுதாரருக்கு இடைஞ்சல் செய்யக்கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்குவது நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், மனுதாரருக்கு முதல் தோற்ற வழக்கு **(Prima facie Case)** உள்ளது என்பதையும், மனுதாரர் தரப்பில் சமநிலை வாய்ப்பும் **(Balance of convenience)** உள்ளது என்பதையும், இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்காத

பட்சத்தில் மனுதாரருக்கு ஈடு செய்ய இயலாத இழப்பு **(Irrepairable loss)** ஏற்பட வாய்ப்பு உள்ளது என்பதையும், மனுதாரர் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**11.** இறுதியாக**,** அசல் வழக்கு முடியும் வரை மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனுச் சொத்துக்களை அமைதியான முறையில் சுவாதீனம் இருந்து அனுபவித்து வருவதை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ, அவர்களது வகை ஆட்களோ, அவரது ஏஜென்டுகளோ, தாங்கள் கட்டியிருக்கும் வீட்டிற்கு எவ்வித கூரையடியும் விடாமல் கூரையடி பாத்தியத்தில் மேல்மாடிக்கு செல்ல படிக்கட்டுகள் அமைத்து மனுதாரருக்கு இடைஞ்சல் செய்யக்கூடாது என்று எதிர்மனுதாரருக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 14 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/–சு.அபூர்வா,
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பழனி.**

**மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் :** இல்லை

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :**

| வ.எண். | தேதி | விபரம் | தன்மை |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 25.02.2025 | பிராது மாதிரி வரைபடம் | அசல் |
| ம.சா.ஆ.2 | 23.01.2012 | பிராது சொத்தை முன்பாத்தியஸ்தர்களான திருமதி.K.விமலா கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் | சான்று நகல் |
| ம.சா.ஆ.3 | 23.01.2015 | பிராது சொத்தை வாதி தன் பெயரில் கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் | சான்று நகல் |
| ம.சா.ஆ.4 | 14.10.2015 | பிராது சொத்திற்கு வாதியின் பெயரில் கொடுக்கப்பட்ட பட்டா | நகல் |
| ம.சா.ஆ.5 | 30.12.2024 | மனுச் சொத்திற்கு 2024–2025 கட்டியவீட்டு வரி ரசீதுகள் | அசல் |
| ம.சா.ஆ.6 | 24.03.2011 | தாவா சொத்தில் வீடு கட்டுவதற்கு கோதைமங்களம் ஊராட்சியில் பெறப்பட்ட அனுமதி சான்றிதழ் | நகல் |
| ம.சா.ஆ.7 | 24.03.2011 | மனுச் சொத்தில் வாதி வீடு கட்ட பஞ்சாயத்தில் பெறப்பட்ட வரைபட நகல் | நகல் |
| ம.சா.ஆ.8 | | மனுச் சொத்தை வீட்டு மனையாக பிரிக்கப்பட்ட வரைபடம் | நகல் |
| ம.சா.ஆ.9 | 15.02.2025 | மனுச் சொத்தை பொருத்து எதிர் மனுதாரர் மீது வாதி காவல்துறையில் கொடுத்த புகார் மனு | நகல் |
| ம.சா.ஆ.10 | 18.02.2025 | காவல்துறையில் மனுதாரருக்கு கொடுக்கப்பட்ட புகார் ஏற்பு ரசீது | கணினி நகல் |
| ம.சா.ஆ.11 | | மனுதாரர் ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.12 | 15.02.2025 | மனுச் சொத்தை பொருத்து அதன் அமைப்பை காட்டக்கூடிய புகைப்படங்கள் (6 எண்ணிக்கை) | அசல் |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் :** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :** இல்லை.

**ஒம்/—சு.அபூர்வா,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பழனி.**